# தமிழீழ காவல்துறையில் பெண்கள்



எதிரியிடமிருந்து மீட்டெடுக்கப்பட்ட எம் தாயக மண்ணில் ஆட்சியமைப்புக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எமது விடுதலை இயக்கம் மேற்கொண்டு வருகிறது. இத்தகைய ஆட்சியமைப்புக்களில் ஓர் அங்கமாகவே தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்போராட்டம் நடைபெறுகின்ற எல்லா நாடுகளையும் போல, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஆட்சியமைப்புக்களை உருவாக்குகின்ற விடயத்தில் நாம் ஈடுபட்டு வருகின்ற அதே வேளை உயர்ந்த கொள்கைத்திட்டத்தின் அடிப்படையில் இவ் அமைப்புக்கள் நிறுவப்பட வேண்டும் என்பதில் மிகவும் கவனமெடுத்து வருகின்றோம். இந்த அடிப்படையிலேதான் தமிழீழ காவல்துறை உருவாக்கப்படுகின்றபோதே சம காலத்தில் பெண்களையும் இதில் இணைத்துக்கொண்டோம். காவல்துறை உருவாக்கப்படுகின்றபோதே அதில் பெண்களை சம காலத்தில் இணைத்துக்கொள்ளுதல் எனும் நிகழ்வானது தமிழீழ வரலாற்றிற்கு மட்டும் உரித்தான தனிச் சிறப்பான அம்சமாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் எங்கும் காவல்துறை ஆரம்பிக்கப்பட்டு பல்லாண்டு காலத்திற்கும் பின்னரே பெண்கள் மிகவும் குறைந்த அளவிலே இணைக்கப்பட்டனர். ஒரு சில காவல் பணிமனைகளில் மட்டும் ஆண் அதிகாரிகளின் கீழ் பணிபுரிகின்ற ஓர் நிலைமையை மட்டுமே அங்கு நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதுவும் எந்தவிதமான அதிகாரமற்ற நிலையில் பெண்களைக் கைது செய்தல் போன்று ஒரு சில தேவைகளுக்காகவே காவல்துறையில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

தமிழீழ காவல்துறையில் பெண்களின் இணைவு என்பது இது போன்ற எதிர்பாராத சில தேவைகளுக்காகவே உருவாக்கப்பட்டதொன்றல்ல. சமூகத்திலும் ஆட்சியமைப்பிலும் பெண்களுக்கு சமமான ஓர் பங்களிப்பை ஏற்றுக்கொண்ட உயரிய கொள்கைத்திட்டத்தின் அடிப்படையிலேயே தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு ஓர் வரலாற்றுப் பரிமாணம் உண்டு. எமது தாயக விடுதலைக்காக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வீரம் செறிந்த விடுதலைப்போராட்டமும் இந்த விடுதலைப் போரை நடத்திக்கொண்டிருக்கின்ற விடுதலைப்புலிகள் இயக்கமும் எமது மண்ணிலே பாரிய மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றன. தேசிய விழிப்புணர்ச்சியுடன் சேர்ந்து சமூகத்தில் புரையோடிப்போய்க் கிடக்கின்ற பிற்போக்குத்தனமான எண்ணங்களுக்கு எதிராகவும் இங்கே பெரியதோர் போராட்ட உணர்வை உருவாக்கிவிட்டிருக்கிறது. இத்தகைய போராட்ட உந்துதலினால் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சியே பெண்கள் தேசிய விடுதலைப்போரிலே பாரிய அளவில் இணைந்து கொள்வதற்குரிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டிருக்கிறது.

தேசிய விடுதலைப்போரில் பெண்களின் பங்களிப்புக் கூட ஏனைய நாடுகளினின்றும் வேறுபட்ட வகையில் சிறப்பான அம்சங்களைக் கொண்டதாக எமது தேசத்தில் விளங்குகிறது.

பல நாடுகளில் இராணுவத்தில் பெண்கள் ஒரு தனிப்படைப்பிரிவில் இருப்பதில்லை. போர்க்களங்களில் மட்டும் இவர்கள் இராணுவத்திற்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு அழைக்கப்படுபவர்கள் கூட எதிரிக்கு எதிராக ஆயுதம் எடுத்துப் போரிடுவதில்லை. காயப்பட்டவர்களை தூக்குதல், மருத்துவ சேவை செய்தல், போரிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு உணவு விநியோகித்தல் உட்பட சகல பின்புல வேலைகளிலுமே ஈடுபடுத்தப்படுகிறார்கள். போரிடும் பணியில் இவர்கள் இணைக்கப்படுவதாயிருந்தாலும் ஆண்களுடன் ஓரிருவர் மட்டும் பணியாற்றும் விதத்தில் படைகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ரஸ்சியாவில் ஒரே ஒரு பெண்தான் இராணுவ உயர் அதிகாரியாக இருந்திருக்கிறார்.

புரட்சிகரமான போராட்டம் நடந்த நாடுகளில் கூட போராட்ட வேளைகளில் மட்டும் பெண்களின் பங்களிப்பு முக்கியப்படுத்தப்பட்டது. போராட்டம் வென்றபின் மீண்டும் பெண்கள் வீட்டிற்குள் முடங்கவேண்டிய நிலையே ஏற்பட்டது. இந்த நிலை எமது மண்ணில் இல்லை. அன்னிய ஆக்கிரமிப்பை உடைத்தெறிவதற்கான தேசிய விடுதலைப்போராட்டத்திலே இணைந்துகொண்ட பெண்கள் சகல செயற்பாடுகளிலேயும் ஆண்களுக்கு சரிநிகராக நின்று சாதனைபடைத்து வருகின்றனர்.


பெண்களின் முக்கியத்துவத்தையும் அவர்களின் பங்களிப்பையும் சகல நிலைகளிலும் எமது விடுதலை இயக்கம் வெளிப்படுத்தி நிற்கிறது. எமது விடுதலை இயக்கத்தின் இத்தகைய உயரிய கொள்கைத்திட்டமும் அதனால் தமிழீழப் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட பாரிய விழிப்புணர்ச்சியும் தமிழீழ காவல்துறையில் பெருமளவு பெண்கள் இணைக்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

தமிழீழ காவல்துறையினருக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டபோது ஆண்களும் பெண்களும் ஒன்றாகவே அனைத்துப்பயிற்சியிலும் ஈடுபடுத்தப்பட்டனர். பயிற்சி வழங்கள், பொறுப்பு நிலையங்களைப் பகிர்ந்தளித்தல், வேதனம் வழங்கல் என்ற எந்த ஒரு நிலையிலும் ஆண்களோடு சமமான நிலையிலேயே பெண்கள் வைத்துப்பார்க்கப்பட்டனர்.

காவல்துறையில் பெண்களை இணைத்தது தொடர்பாக தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் கருத்துத் தெரிவிக்கையில் எந்தொரு நிர்வாகமும் பெண்களின் பங்களிப்பு இல்லாமல் பூரணமடையாது என்றார். மேலும் தெரிவிக்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பயிற்சி, சமமான அறிவூட்டல் என வேறுபாடற்ற வகையிலேயே பயிற்சி வழங்கப்பட்டது என்றும், இதன்போது ஆண்களுக்கு நிகராக பல இடங்கங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்கள் எனவும் தெரிவித்தார். திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு விசேட பயிற்சி கொடுக்கப்பட்ட ஒரு பெண்தான் கோப்பாய் காவல் பணிமனையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ காவல்துறையில் பெண்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட விடயமானது பழமைவாத கோட்பாடுகளுக்குள் ஊறிப்போன எமது சமுதாயத்தில் நடைபெற்ற ஓர் புரட்சிகரமான நடவடிக்கையாகும்.

வீட்டைவிட்டு பெண் வெளியே தலைகாட்டுவது தவறு என்ற தவறான பார்வை இங்கே உடைக்கப்பட்டிருக்கின்றது.



ஆண்களுக்கு நிகராக சகல துறைகளிலும் பெண்களால் செயல்ப்படமுடியும் என்ற மிகப் பெரிய நம்பிக்கையுடன் தமிழீழ காவல்துறையில் பெண்கள் இணைக்கப்பட்டிருக்கின்றனர். சட்டம், ஒழுங்கைப் பேணவும், நீதியை நிலைநாட்டவும் பெண்கள் தனித்துச் செயற்படுகின்ற தன்மையை தமிழீழ காவல்துறையில் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழீழ காவல்துறையில் பெண்கள் இணைக்கப்பட்ட இந்நிகழ்வானது இன்று எமது சமுதாயத்திலே பெண்கள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை இலகுவாக செயற்படுத்தக்கூடிய ஒரு களத்தை உருவாக்கித் தந்திருக்கிறது.

ஆணாதிக்க வன்முறைக் கொடுமைகளுக்கு எதிராகவும், பெண்கள் தாம் சமூகத்திலே எதிர்கொள்ளுகின்ற நெருக்கடிகளுக்கு எதிராகவும் நீதியானதோர் தீர்வைத் தேடிக்கொள்ள காவல்துறைப் பெண்கள் பெரிதும் உறுதுணையாக விளங்குகின்றனர்.

பெண்ணுரிமைப் போராட்டத்தில் இது ஓர் வளர்ச்சி நிலையை காட்டி நிற்கிறது. இத்தகைய களத்தை அச்சாணியாகக் கொண்டு தமது வாழ்வை மேம்படுத்தவும் சமுதாய வாழ்வை மேம்படுத்தவும் பெண்கள் இது போன்ற துறைகளில் இணைந்துகொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். ■

ஜெயா

## அற்புதமான.....

கிட்டண்ணை, இறுதியாக நாட்டை விட்டுப் புறப்படும் காலத்தில் அவர் மிகவும் நொந்து போயிருந்தார். இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட தன்னையும் சக போராளிகளையும் விடுவிக்குபடி சிறையில் உண்ணாவிரதம் இருந்ததும், அதனைத் தொடர்ந்து அவர் யாழ் நகரில் விடுவிக்கப்பட்டதும், அதன் பின்னர் அவர் மணலாற்றுக் காடு சென்று தலைவருடன் இணைந்து கொண்டதும் தெரிந்தவைகள் தான். தன்னுடன் இறுதிவரை துணைநின்ற போராளிகள் சிறையில் வாடுவதையும், இந்தியர்கள் தன்னை மட்டும் விடுவித்து விட்டு தன் தோழர்களை சிறையில் வைத்து வாட்டுவதையும் சொல்லிச் சொல்லி வெதும்புவார். 'என்ர கோஸ்டி' எல்லாத்தையும் என்னட்டை இருந்து பிரிச்சப் போட்டாங்கள் மச்சான்" என்று சொல்லும்போது அந்த வீரனின் நெஞ்சின் ஈரம் கண்களில் வந்து நிற்கும். கிட்டண்ணை சர்வதேச தொடர்பாளராக நாட்டை விட்டு புறப்படுவது என்பது முடிவு செய்யப்பட்டு விட்டது. எந்த வேலையாக இருந்தாலும் பொறுப்பேற்க வேண்டும் என்ற அவரது வழமையான நடைமுறைக்கு சோதனையாக வந்தது இம்முடிவு. எங்கோ ஒரு ஐரோப்பிய நாட்டில், எம் தாயக மண்ணை விட்டு வெகு தொலைவில், தான் உயிராய் நேசித்த போராளிகளை விட்டுப் பிரிந்து,.... தன் மக்களை விட்டுப் பிரிந்து, தாய் தந்தையாய் தன்னை வளர்த் தலைவரை விட்டுப் பிரிந்து.... நினைத்து நினைத்து கலங்கினார்.

மணலாற்றுக் காடு. நான் அப்போது யாழ் மாவட்ட நிர்வாகத்தை பானுவிடம் ஒப்படைப்பதற்காக யாழ்ப்பாணம் புறப்பட இருந்தேன். எம்மிடையே நீண்ட பிரிவு வரப்போகிறது என்பது தெரிகிறது. சிறிய வட்டக் கொட்டிலில் வைத்து கதைக்கத் தொடங்கினார். இயக்கத்தில் ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி, தலைவரின் எண்ணங்களுக்கு நாம் எப்படி செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என்பது பற்றி, "எமது போராட்டத்திற்காக என்ன வேலை ஒப்படைக்கப்பட்டாலும் அதில் தீவிரமாக ஈடுபட வேண்டும். எமது கடைமையை மேலும் மேலும் சிறப்பாகச் செய்வதற்கு வேண்டிய சகல முயற்சிகளிலும் இறங்க வேண்டும். எனக்கு என்ன வேலை எண்டாலும் செய்வன். எங்களின்ர பெடியளின் உடுப்பைத்தோய்த்து மடிக்கும் வேலை எண்டாலும், அதை எப்படி வெள்ளையாய்த் தோய்ப்பது என்றுதான் ஆராய்ச்சி செய்வன். எனக்கு இது பிரச்சனை இல்லை." எனது பொறுப்பு மாற்றத்திற்காகச் சொன்னாரா? அல்லது தனது புதிய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதில் தனது மனப் போராட்டத்திற்காக தனக்குத்தானே சொன்னாரா ... தெரியாது.

அவர் சொல்லிக் கொண்டே இருக்கின்றார். தூரத்தே கேட்கும் சில்வண்டுச் சத்தத்தை விட காடு நிசப்தமாய் இருக்கிறது. நீண்ட கனத்த மௌனத்தின் பின் "எங்கட சனத்தையும், இந்த மண்ணையும் விட்டிட்டுப் போகப் போறன் மச்சான். இனி எந்தக் காலமோ?" சொல்லி முடிக்காமல் குமுறிக் குமுறி அழத் தொடங்கினார். எமது தாயகத்தின் மீது எமது மக்களின் மீது, எமது விடுதலைப் போராட்டத்தின் மீது, எமது தலைவர் மீது அவர் வைத்திருந்த பாசம், பற்று அளவிட முடியாதது. ■

### பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி செல் வீச்சினால் சேதம்

பலாலியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் நள்ளிரவு வேளை மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் பாடசாலை சேதமடைந்தது.

மேற்படி இராணுவ முகாமிலிருந்து பண்டத்தரிப்பு பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களுக்கு இலக்காகி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பலத்த சேதமடைந்துள்ளது.

பாடசாலை கூரையின் மீது வீழ்ந்து வெடித்த எறிகணை ஒன்றினால் பாடசாலை அலுவலகமும் அதனுடன் இணைந்த வகுப்பறைகளும் பலத்த சேதமடைந்துடன் தளபாடங்களும் சிதறிக் காணப்பட்டன. ■